## அத்தியாயம் 7

# வழிநடைச் சிந்து

*கிராமத்து மக்கள் தொழில்களில் ஈடுபடும் பொழுதும் ஓய்வு வேளைகளிலும் பயணம் போகும் போதும் கவி படிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். அவர்களது தொழில்கள் பெரும்பாலும் விவசாயம், சேனைப் பயிர்ச்செய்கை, மீன்பிடித்தல், மந்தை வளர்ப்பு, சிறுகூலி வேலைகள் என்பனவாகும்.*

*விவசாயத்தோடு தொடர்பான உழுதல், மிதித்தல், காவல், சூடடித்தல் போன்றன நீண்ட நாட்களுக்குச் செய்யப்படுவன. அவ்வாறு தொழிலில் ஈடுபடும் பொழுது தமது களைப்பைப் போக்கி உற்சாகமாயிருக்கக் கவிபாடுவர். தமது வேலைகளுக்குத் துணையாயிருக்கும் மாடுகளும் இவ்விசையால் உற்சாகமடைகின்றன எனச் சிலர் கூறுவதுண்டு. இது உண்மையாயிருக்கலாம். ஏனெனில் இசையின் ஓசையினால் பயிர்கள் செழிப்பாக வளர்கின்றன எனச் சில ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர். ஏற்றப்பாடல், ஏர்பூட்டும் போது பாடுதல், ஏர்ப்பாட்டு, அருவிவெட்டுப்பாடல், அறுவடைப்பாடல் என்பன அவ்வாறான விவசாயப் பாடல்களாகும்.*

*அம்பா, மீன்பிடிப்பாடல், தோணிக்காரன் பாடல் என்பன மீனவர்களால் பாடப்படுபவையாகும்.*

*வீதியமைப்போர் பாடல் போன்றன கூலி வேலை செய்யும் போது பாடப்படுவனவாகும்.*

*வழிப்பயணம் போகும் போது பாடப்படுவது 'வழிநடைச் சிந்து' எனப்படும். கால்நடையாகவும், மாட்டு வண்டில்களிலுமே அக்காலப்*

பிரயாணங்கள் அமைந்தன. மிகப் பெரும் பணக்காரர் சிலரும், உயர் அரசாங்க அதிகாரிகளும் குதிரைக் கோச்சுகளை உபயோகித்தனர். பயணிகளின் வசதிக்காக நெடுஞ்சாலைகளில் சுமைதாங்கிகளும் தண்ணீர்ப்பந்தல்களும் இடைக்கிடை அமைக்கப்பட்டிருந்தன. வீதியின் இருமருங்கிலும் நிழல்தரு மரங்களும் பேணி வளர்க்கப்பட்டன.

## i. பாலம் பார்க்கப் போவோம்

கல்முனைக்கருகே மேற்குப்புறமாயுள்ள கிட்டங்கித்துறைக்கும் அக்காலத்தில் புளியந்தீவு என அழைக்கப்பட்ட தற்போதைய மட்டக்களப்புக்குமிடையே வாவி மூலம் இயந்திரப்படகு சேவையிலீடுபட்டிருந்த காலத்துப் பாடல் இதுவாகும். இயந்திரப்படகு, சூத்திரக்கப்பல் என்னும் பெயரால் அக்கால மக்களால் அழைக்கப்பட்டது. மாவடிப்பள்ளியிலிருந்து புறப்படும் புலவர் சாய்ந்தமருது, கரைவாகு, கல்முனை, நற்பிட்டிமுனை என்னும் ஊர்களுக்கூடாகக் கிட்டங்கி என்னும் இடத்தை அடைகிறார். இங்கிருந்து இயந்திரப்படகு மூலம் மட்டக்களப்பு வாவியினூடாகப் புளியந்தீவை அடைகிறார். பிரயாணத்திற்கு ஆயத்தமாகும்போது அவர் மனைவியுடன் நடாத்தும் சம்பாஷணை மூலம் அக்கால உடைகளைப் பற்றியும் நகைகளைப்பற்றியும் நாம் அறிய முடிகின்றது. வழியில் எதிர்ப்படும் ஊர்களின் சிறப்புக்களையும் அறிகிறோம்.

சீர்பெருகி நல் சிறப்பொடு மதினா நகராம்
சொல்ல முடியாத நல்வானமும் பூமியும்
துணையான நபிநாயகமே....
நண்பான பூமிதனில் மானிடர்க்குதவியாய்
அருள் பெற்ற அவுலியாக்கள்
ஆலமுமீன்கள், வலிமார்கள், அறிவுள்ள கல்வியாட்கள்...
சொற்பிழைகள் வரி பிசகு சிற்றெழுத்து சீரெழுத்தென
துன்பம் நீக்கி....
சுத்தமுடன் வெற்றி தந்தருள்வாய் துய்யமா காப்பு நீயே..

நீதி தவறாத மூமீன்கள் வாழுகின்ற
மாவடிப்பள்ளியிலிருந்து
நல்ல நகையதாகிய மாலை மணிகளும்
நின்றிதமாக வணிந்து
கோரிடும் கூந்தலை வாரிமுடித்து
குலங்கலையாமலே குச்சுமணிந்து
மாதிரியான ரவிக்கையும் பூட்டிய மாமயிலே

பாலம் பார்க்கப் போவோம் வாருங்கோ
எந்தன் பாவையரே நடந்து வாராய்
பாலம் பார்க்கப் போவோம் வாருங்கோ....

உன் காலடிப்பீலி கலீர் கலீர் என்கவே
கையில் வளையல் சலீர் சலீர் என்கவே
மூக்குத்தி நல்லா பளீர் பளீர் என்கவே
மோதலைக் காப்பு தகதக வென்கவே
கைக்கட்டு தாவத்து கண்ணொளி மின்னவே
கெண்டையில் தண்டை கலீர் கலீர் என்கவே
கிளிமொழிமாதே என்கூட நடந்துவா, பாலம் பார்க்கப்....

கண்ணுக்குச் சுறுமா கணக்காகப் போட்டுக்கோ
பல்லுக்குக் காவி பருவமாய் தீட்டிக்கோ
சட்டை ரவிக்கை சரியாகப் பூட்டிக்கோ
வெண்பட்டுச் சோமனை விசிறி உடுத்துக்கோ
கொண்டைக்கு மாலையை கூர்மையாய் குத்திக்கோ
கூட வருவாரோ டுறவாகப் பேசிக்கோ
கொண்ட கணவனைக் கண்டு நடந்துவா, பாலம் பார்க்கப்.......

அரிசி கறிகள் அடுக்காய் எடுத்துக்கோ
தக்கவிதமான சாமான்கள் எடுத்துக்கோ
அயல் வீட்டுக்காரரை ஆராய்ந்து பார்த்துக்கோ
பக்கத்தில் வாறவரை பார்த்து நீ சேர்ந்துக்கோ
நிண்டு கதைக்கவும் நேரமும் காணாது
நேரிழையாளே வா நீ காரில் ஏறுவம், பாலம் பார்க்கப்....

காருக்குக் காசி கணக்காக எடுத்துக்க
கண்டசாமான் வாங்க புறம்பா எடுத்துக்க
நிண்டு கதைக்கவும் நேரமும் காணாது
வசு வருகுது வாங்க நாம் ஏறுவம்
ஏறிய உடனே இழுத்தங்க ஓடிடும்
ஏந்திழையே புள்ள பயப்படாதடீ, பாலம் பார்க்கப்.....

பாலப் புதுமையைப் பாங்காவே கேளு
பட்ட பாட்டைச் சொல்ல எட்டுநாள் செல்லும்டி
தலையிடி காய்ச்சல் கிறுகிறுப்புப்போல
சத்தி எடுக்க ஓங்காளம் வாறாப்போல
வெத்தில பாக்கையும் தின்னவும் ஏலாது
அந்திரம் போலவே கண்ணுக்குத் தோணுது
அக்காமாரே இது என்ன புதினம்டி, பாலம் பார்க்கப்...

சங்கை மிகுந்திடும் மன்னர்கள் வாழ்கின்ற
சாய்ந்தமருதூர் இதுதான்டி
நல்ல சங்கை பொருந்திய சாமான்கள் விற்கின்ற
சந்தைக்கு முன்னால் தோன்றி
வாச மணச்சாமான் வாங்கி
இன்பமாகிய நல்ல செண்டு
இந்தக் கரவாகு ஊர்விட்டு
கண்மணியே அதோ கல்முனை தோணுது, பாலம் பார்க்கப்....

கல்முனைச் சந்தியின் கடற்கரை வீதியின்
கட்டடத்தைச் சுற்றிப்பாரு
இதில் கட்டளைச்சட்டம் கவண்மேந்து
நீதி கருத்தரராளுகின்ற நாடு
கட்டளைச்சட்டம் கவண்மேந்து நீதியும்
கச்சவடம் செய்து மிச்சமெடுப்போரும்
மெத்த எனச் சனம் சுற்றியிருக்குது
மெல்லியலாளே நீ வா இன்னமும் சொல்கிறேன், பாலம் பார்க்கப்...

கன்னியிளம் குயில் அழகாய்ச் சொல்லிடும்
காதல் மொழிதனைக் கேளீர்
என்ர கால் நடையாக நடக்க முடியாது
கனதூரமும் அந்த ஊரு
மாதா தலம் அன்னா தெரியுது
என்னுடன் சேர்ந்து நடந்துவா தோழியே
நன்னய மாகிய முன்னோர்கள் சொல்லிடும்
நற்பிட்டிமாமுனை தனைக் காணலாம், பாலம் பார்க்கப் ...

நற்பிட்டிமாமுனை நகர்தனைச் சேர்ந்திட்டால்
நாகரீக மிதைப்பாரு
இதை நாடி நடந்து நாம் அப்பால போனாக்கா
நல்லதோர் கிட்டங்கி ஆறு அதில்
மீறிய சூத்திரக் கப்பலைப்போல விசைகொண்டு
ஓடுதென்னாளும் நாம ஏறியதிலோடுவோம்
இனிச் சுணங்காமலே ஏந்திழையே
வழிப்பூந்து நடந்து வா, பாலம் பார்க்கப் ........

ஏறியே அங்கம் விசைகள் கொடுத்தால்
இரைச்சலாய் ஓடுது பாரு
அந்தம் மீறியே சீறிச் சினந்து
விசைகொண்டு ஓடுதென்னாளும்
அதில் தேடித்திரிகின்ற மீன்கள் சில
திரண்டு விரண்டு திசை தப்பி
ஓடுதென்னாளும், பாலம் பார்க்கப் .......

காட்சி பெருநகர் காத்தான்குடிதானே
கண்மணி நாயகம் குழந்தம்மா கபுறடி
நிண்டு அவர்கள் பெயரில் பாத்திஹாவும் ஓதி
நேத்திகளான முராதுகளும் வைத்து
நல்ல கலியாணச் சோறு பலகார வகைகளும்
காணிக்கை கட்டியே கையேந்தி நிற்பர்
அள்ளு காணிக்கை அவுளாமல் கட்டியும்
அவரவர் தக்க முராதுகள் வைப்பார், பாலம் பார்க்கப்........

புத்தி சிறந்த புளியந்தீவிது
பூங்கொடிமாதே என்கூட நடந்து வா
ஆற்றுக்கு அங்காலே அன்னா தெரியுது
அது தான் பெண்ணே புளியந்தீவு டவுண்
அந்தரத்தைத் தொட்ட கல்வீடு கச்சேரி
அன்னா தெரியுது இன்னமும் நடந்துவா
கிட்ட நடந்து வா கிளி மொழி மாதே
என் கெட்டித்தனமாக இன்னமும் சொல்கிறேன், பாலம் பார்க்கப்.....

## ii. கல்லோயா காண்போம்

கல்லோயாத் திட்டம் (கல்-ஓய) ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இங்கினியாகலை என்னும் இடம் அவ்வபிவிருத்தி வேலைகளின் மத்திய தளமாக விளங்கியது. இங்குதான் இரு குன்றுகளுக்கிடையே அணை கட்டப்பட்டு இன்றைய சேனநாயக்க சமுத்திரம் உருவானது. நூற்றுக்கணக்கான அமெரிக்கர், கனேடியர்களும், பெருந்தொகையான பிரமாண்டமான இயந்திரங்களும், ஆயிரக்கணக்கான தொழிலாளரும் பணிபுரியும் வேலைத்தளமாக அது விளங்கியது. அதைப்பார்ப்பதற்கு கிழக்குப்பிரதேச மக்கள் அனைவரும் சென்றனர்.

அவ்வாறு மருதமுனையிலிருந்து இங்கினியாகலை பார்ப்பதற்குத் தன் மனைவியுடன் புறப்பட்ட புலவர் ஒருவர் வழிநெடுகிலும் உள்ள ஊர்களின் சிறப்புக்களைத் தன் மனைவிக்கு எடுத்துக்கூறிச் செல்கிறார். பாண்டிருப்பு, கல்முனை, கல்முனைக்குடி, சாய்ந்தமருது, காரைதீவு, மாவடிப்பள்ளி, சம்மாந்துறை, மல்வத்தை, அம்பாறை, கொண்டவட்டுவான், பரஹூாகலை என்பன அவரால் வர்ணிக்கப்படுகின்றன.

இக்கினியாகல்லு பார்க்க
எட்டி நடந்து வா தேனே
இக்கினியாகல்லு பார்க்க
எழுந்துமே என்சொல் கிளி மொழியாளே
நடந்து வா, பஞ்சிப்படாமலே ஓடி நடந்து நீ

பார்த்து மகிழ்ந்து வரலாமடி
இக்கினியாகல்லு பார்க்க
எட்டி நடந்து வா தேனே.

பாவையரே நீ எழுந்து நடந்து வா
பாண்டிருப்பூரதைப் பாரு
அதில் பார்த்தால் சனக்கூட்டமாக நிற்கிறார்
பாவையே நீ வந்துசேரு.

இன்னும் மண்பாண்டம்
செய்யும் தலமொன்று இருக்குது
மங்கையே நீ வந்து பாரு
இன்னும் தங்கத்தால் வேலைகள் செய்யும் தலம் இது
தட்டுகிற சத்தம் கேளு
தங்காமல் ஓடி நடந்து வாருமே
தாளவட்டான் சந்தி அன்னா தெரியுது
சக்கையுழுதியே செந்நெல் விதைக்கிறார்
சுறுக்கா நடந்து வா மற்றது சொல்லுறன்
இக்கினியாகல்லுமானே பார்க்க
எட்டி நடந்து வா தேனே.

ஆசுபத்திரியானதோர் கட்டிடம்
அன்னா தெரியுது மானே
அடி அன்ன மயிலே
முன்னே நடந்து வா
ஆட்கள் கிடப்பதைப் பாரு
இன்னும் சோதனை பண்ணும் குழல்
கொண்டு வைத்து
சுறுக்கா மருந்து கொடுப்பார்
இன்னும் ஊசிகள் பாய்ச்சி
மருந்து கலக்கிறார் அதை
ஓடிவந்து நீ பாரு.

அச்சி சொல்லாமலே எட்டி நடந்து வா
அன்னா தெரியுது கல்முனைக்குடியாம்
இக்கினியாகல்லு மானே
எட்டி நடந்து வா தேனே.

செப்பமாகிய பள்ளி தெரியுது
சொல்லுகிறேன் கொஞ்சம் கேளு
அதில் சித்திர வேலைகள் செய்து இருக்கிறார்
சொல்ல முடியாது பாரு
இன்னும் மார்க்கட்டுச் சந்தையில்* மாம்பழம் விற்கிறார்
மாங்குயிலே வந்து கேளு
மாடறுத்து இறைச்சிகள் விற்கிறார்
மாங்குயிலே வந்து வாங்கு
பாவையரே நீயும் ஓடி நடந்துவா
இக்கினியாகல்லு மானே
பார்க்க எட்டி நடந்து வா தேனே.

சாய்ந்தமருது என்னும் ஊர் தெரியுது
தையலரே வந்து சேரு
அங்க சங்கவான் கூடியிருக்கும் தலமாம்
தங்கலாம் என்றுரைப்பாரு
ஜவுளிக்கடைகள் பரத்தியிருக்கிறார்
தையலரே அதைப்பாரு
பட்டுப் புடவைகள் மிச்சம் இருக்குது
பார்த்து அதில் கொஞ்சம் வேண்டு
இன்னும் பாவாடை சட்டைத் துணிகள் இருக்குது
பட்டால தச்ச றவுக்கை இருக்குது
ஒன் கைக்கு ஏற்ற துணிகள் இருக்குது
கோவையரே நீ ஏவி நடந்து வா
இக்கினியாகல்லு மானே
பார்க்க எட்டி நடந்து வா தேனே

* தற்போது அஷ்ரஃப் ஞாபகார்த்த மருத்துவமனை அமைந்திருக்கும் இடத்தில், முன்பொரு காலத்தில் பாரிய சந்தையொன்றிருந்தது.

காலெறியாமலே ஓடி நடந்து வா
காரதீவெங்கிற ஊரு
நீயும் முன்னே நடந்து வா
முச்சந்தி றோட்டு ஊடுகள் தெரியுது பாரு
பாதையோரம் சோனகர் நின்று
பாத்திஹா ஓதுவார் கேளு
அங்கே பக்கத்தில் மக்காமும் கட்டியிருக்குது
பார்த்து நீ காணிக்கை போடு
அடி மானே நடந்து வா பாலங்கள் போகுது
மாவடிப்பள்ளியாம் ஊர் வருகுது
சற்றே நடந்து வா சம்மாந்துறையிது
தங்கியே போகலாம் மங்கையே நீ கேளு
இக்கினியாகல்லு மானே பார்க்க
எட்டி நடந்து வா தேனே.

நேரே நடந்து வா நேரமாகுது
நெத்திக்கு நேரே ஒரு றோட்டுத் தெரியுது
மத்தியான வெயில் மெத்த விழுகுது
மாமயிலே நீ ஏகி நடந்து வா
இக்கினியாகல்லு மானே பார்க்க
எட்டி நடந்து வா தேனே.

மாமயிலே நீ ஏகி நடந்து வா
மல்வத்தை என்கிற ஊரு
அதில் மட்டிலடங்காத வயல்கள் இருக்குது
மாங்குயிலே வந்து பாரு
இன்னும் கூடாரம் கட்டும் குறவர் இருக்கிறார்
கோதையே நீ வந்து பாரு
கொஞ்சம் நடந்தால் குளங்கள் தெரியுது
கோதையே நீ வந்து பாரு
மாலையதாகுது சோலை வருகுது
மான்கலைக்கூட்டம் வழியினில் போகுது
அஞ்சாமல் ஓடி நடந்து நீ பாரடி

அம்பாறை என்னும் குளமங்கு தெரியுது
இக்கினியாகல்லு மானே பார்க்க
எட்டி நடந்து வா தேனே....

இவ்வாறு நடந்து சென்று இங்கினியாகலையை அடைந்தவுடன் அங்குள்ள நிலைமைகளையும் பெரிய இயந்திரங்களையும் வேலைத் தலங்களையும் வேலைகளையும் புலவர் வர்ணிக்கிறார்.

அன்னா தெரியுது இக்கினியாகல்லு மானே
எட்டி நடந்து வா தேனே
ஓலைக்கடைகளும் பேலியாய் தோணுது
ஓடி நடந்து போய்ச் சேரு
காய்கறி விற்கும் கடைகளிருக்குது
கன்னியரே போய்ப்பாரு
கட்டாக்கருவாடு கட்டோடு விற்கிறார்
பார்த்து அதில் கொஞ்சம் வேண்டு
சோத்துக்கடை வைத்து ஆக்கிக் கொடுக்கிறார்
சும்மா பசியாறிப்பாரு.

ஓடி நடந்து வா உள்ளால போகலாம்
உத்தம ராஜரின் சித்திர வேலையாம்
கண்ணே நடந்து வா இன்னமும் சொல்லுறன்
சுற்றி மிசின்கள் சுழண்டு வருகுது
இக்கினியாகல்லு மானே பார்க்க
எட்டி நடந்து வா தேனே.

மண்ணினை அள்ளி மரத்தைப் புடுங்குது
மாங்குயிலே வந்து பாரு
கேடரைத் தூக்கியே கீழே இறக்குது
கிட்ட நடந்து போய்ச் சேரு
மரத்தை அறுத்து மலைபோல் குமிக்குது
மாங்குயிலே வந்து பாரு
மண்ணினை அள்ளி மலைபோல் குமிக்குது
மன்னவளே வந்து பாரு
இன்னும் கம்பி மரங்களை நாட்டியிருக்குது

*காந்த லயிற்றுக்கள் தூக்கியிருக்குது*
*காறுகளோடி மாறித்திரியுது*
*கண்ணே நடந்து வா இன்னமும் சொல்லுறன்*
*இக்கினியாகல்லு மானே பார்க்க*
*எட்டி நடந்து வா தேனே.*

## iii. கல்லோயாத் திட்டம்

*பிரித்தானியரின் ஆட்சியிலிருந்து இலங்கை சுதந்திரமடைந்த காலகட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது பல்நோக்கு அபிவிருத்தித் திட்டம் இதுவாகும். அப்போது அமெரிக்காவில் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டிருந்த பாரிய Tenessie Valley Authorityயை மாதிரியாகக் கொண்டு கல்லோயா அபிவிருத்தித் திட்டம் வடிவமைக்கப்பட்டது. இதில் விசேடம் என்னவென்றால், எத்தகைய வெளிநாட்டு நிதியுதவியுமின்றி முற்று முழுதாக இலங்கையின் சொந்தப் பணத்தில் நிறைவேற்றப்பட்ட ஒரு முயற்சி இதுவாகும். இதிற் பணிபுரிந்த பிறநாட்டு நிபுணர்களுக்கும் ஒப்பந்ததாரருக்குமுரிய முழுக் கொடுப்பனவும் எமது நிதியிலிருந்தே வழங்கப்பட்டது.*

**பட்டிப்பளை நீர்:**

*1949ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28ஆம் திகதி அப்போதைய பிரதமர் டி. எஸ். சேனநாயக்க இங்கினியாகலையில் நிறுவப்பட்ட நினைவுத் தூணைத் திரைநீக்கம் செய்ததோடு கல்லோயா அபிவிருத்தி ஆரம்பித்து வைக்கப்பட்டது. பட்டிப்பளை ஆற்று நீரைத் தேக்கி வைத்து விவசாயத்துக்குப் பிரயோசனப்படுத்துவதே இத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும்.*

*அத்துடன் குடியேற்றங்கள், மின்னுற்பத்தி, தொழிற்சாலைகள் நிறுவுதல், கரும்புச் செய்கை என்பனவும் உள்ளடக்கப்பட்டன.*

*பதுளை மாவட்டத்திலுள்ள மடுல்சீமா மலைத்தொடரிலிருந்து ஊற்றெடுக்கும் பட்டிப்பளை ஆறு 62 மைல் தூரம் ஓடிக் கிழக்குக் கடலில் சங்கமித்தது. இந்நீரில் ஒருபகுதியும் வருடாந்த மழைநீரும் மஹாகண்டிய, பள்ளங்ஓயா, கொண்டவட்டுவான், அம்பாறை, இறக்காமம்,*

வளத்தாப்பிட்டி, சடயந்தலாவை, சாகாமம் ஆகிய குளங்களிற் தேக்கி வைக்கப்பட்டு வேளாண்மைச் செய்கைக்கு உதவியது. எனினும் பருவமழை தப்பிவிடும் காலத்தில் இச்சிறு குளங்களிற் போதிய நீர் நிறையாது. இதேபோன்று அதிக மழை பெய்யும் காலத்திற் குளக்கட்டு உடைப்பெடுத்துத் தண்ணீர் விரயமாகிவிடுவதுமுண்டு. இதனால் ஒரு போகம் நெற் செய்கையைக் கூட விவசாயிகள் ஒழுங்காகச் செய்ய முடியாதிருந்தனர்.

**முதலாவது எண்ணக்கரு:**

இங்கினியாகல எனுமிடத்திலுள்ள இரு மலைக்குன்றுகளுக்கிடையே அணையொன்றைக் கட்டி பட்டிப்பளையாற்று நீரைச் சேமித்துப் பயன்படுத்தும் முறையைப்பற்றி 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஒருவர் தீவிரமாகச் சிந்தித்தும் உயர் அதிகாரிகளுக்கு எடுத்துக் கூறியுமுள்ளார். அவரது பெயர் அப்துல் கரீம் காரியப்பர் என்பதாகும்.

கல்முனையைச் சேர்ந்த ஏ.கே. காரியப்பர், ஏறாவூர் - கோறளைப்பற்று வன்னியாராகவும், பின்னர் மட்டக்களப்பு - ஊவா மாவட்டங்களின் பிரசித்த நொத்தாரிசாகவும் பணிபுரிந்தார். டொனமூர் அரசியலமைப்பின் கீழ் 1931ஆம் ஆண்டில் நடைபெற்ற முதலாவது சட்டசபைத் தேர்தலில், மட்டக்களப்புத் தெற்குத் தொகுதியிற் போட்டியிடுவதற்கான கட்டுப் பணத்தையும் கச்சேரியிற் செலுத்தியிருந்தார். தனது சமூக சேவை மூலம் இப்பிரதேசத்தில் மிகவும் பிரபல்யம் பெற்றிருந்த இவர், மிக இலகுவாக அத்தேர்தலில் வென்றிருக்க முடியும். அவ்வாறு நடைபெற்றிருந்தால், சட்டசபைக்குத் தெரிவான முதலாவது முஸ்லிமாக இருந்ததோடு, அமைச்சராகவும் வந்திருப்பார். ஆனால் முஹம்மது மாக்கன் மாக்காரின் அழுத்தம் காரணமாக அவருக்காக விட்டுக் கொடுத்து, தேர்தல் விண்ணப்பம் ஏற்கும் நாளன்று கச்சேரிக்குச் செல்லவில்லை.

இங்கினியாகல அணைக்கட்டைப்பற்றி 1905 ஆம் ஆண்டிலேயே ஏ.கே. காரியப்பர் குறிப்பிட்டிருக்கிறார். இலங்கையின் ஆங்கிலேய ஆளுநர் காலத்துக்குக் காலம் மாகாணங்களுக்கு விஜயம் செய்வது அக்கால வழக்கமாகவிருந்தது. அவ்வாறு செல்லும் பொழுது, அப்பிரதேசத்தினரால் மிகவும் பிரமாண்டமான முறையில் வரவேற்பு விழாவொன்று நடத்தப்படும்.

அவ்விழாவில் வாசித்தளிக்கப்படும் வரவேற்புப் பத்திரத்தில் அம் மாவட்டத்தின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு வேண்டிய கோரிக்கைகளும் விடுக்கப்படும்.

இலங்கையின் ஆளுனர் கிழக்கு மாகாணத்துக்கு 1905, 1910, 1921, 1926 ஆம் ஆண்டுகளில் விஜயம் செய்தபொழுது அச்சந்தர்ப்பங்கள் அனைத்திலும் வாழ்த்துப் பத்திரத்தை வாசித்தளிக்கும் பணி ஏ.கே. காரியப்பரிடமே ஒப்படைக்கப்பட்டது. அச் சந்தர்ப்பங்களில் அவர் வலியுறுத்திய முக்கிய விடயங்கள் வருமாறு:

1. இங்கினியாகலையில் அணை கட்டி, நீரைச் சேமித்து விவசாயத்துக்கு உபயோகப்படுத்தல்
2. ஒவ்வொரு விவசாயிக்கும் 5 ஏக்கர் நீர்ப்பாசன நிலமும் 3 ஏக்கர் மேட்டு நிலமும் வழங்குதல். (1942-43 ஆண்டு காலப்பகுதியில் எ. எம். எ அஸீஸ் கல்முனை அவசரகாலக் கச்சேரியின் உதவி அரசாங்க அதிபராயிருக்கும் பொழுது இது நிறைவேற்றப்பட்டது)
3. ஒவ்வொரு விவசாயிக்கும் ஒரு சோடி எருமை மாடுகளை வழங்குதல்
4. ஒவ்வொரு கிராமத்திலும் இரு மொழி (தமிழ், ஆங்கிலம்) பாடசாலைகளை நிறுவுதல்

இவரது மகஜர்களை அடிப்படையாகக் கொண்டே பின்னொரு காலத்தில் நீர்ப்பாசனப் பணிப்பாளராயிருந்த ஜே.எஸ். கென்னடி என்பவர் பட்டிப்பளையாற்றுத் திட்டம் தொடர்பான உந்துதலையும் தகவல்களையும் பெற்றுக் கொண்டார்.

**திட்ட வரைபுகள்**

நீர்ப்பாசனப் பணிப்பாளர் ஜே.எஸ். கென்னடி 1935ஆம் ஆண்டு இதற்கான செயற்றிட்டமொன்றை முன்வைத்தார். இத்திட்டத்தை முன்னெடுத்து பட்டிப்பளையாற்று நீரைத் தேக்கி வைப்பதன் மூலம் வேளாண்மைச் செய்கையைக் கிரமமாக மேற்கொள்வதுடன், மேலதிகமாகப் புதிய நிலங்களையும் விவசாயத்துக்குட்படுத்துவதோடு, மாரிகாலத்தில் கிழக்குக் கரையோரக் கிராமங்களில் ஏற்படும் வெள்ளப் பெருக்கையும் தவிர்க்கலாம் எனக் குறிப்பிட்டார்.

வெறுமனே அணைகட்டி ஆற்று நீரைச் சேமித்து உபயோகித்தல் எனும் எண்ணத்திலிருந்து, இந் நீர்ப்பாசனத் திட்டத்தை மேலும் விரிவுபடுத்தவேண்டும் எனும் சிந்தனை 1940களில் வலுப்பெற்றது. அப்போது சட்டசபையின் மட்டக்களப்புத் தெற்குத் தொகுதியின் அங்கத்தினராயிருந்த எம்.எஸ். தர்மரெத்தினம் அச்சபையிலும், அமைச்சர்களிடமும் அதிகாரிகளிடமும் இதனை வலியுறுத்தி வந்தார்.

இதன் விளைவாக, நீர்ப்பாசனப்பணிப்பாளர் ரி. அழகரெத்தினமும் நிலஅளவை நாயகம் ஆர்.ஏ. புறோஹரியரும் 1940ஆம் ஆண்டு தமது உதவியாளர்களுடன் இப் பிரதேசத்துக்கு வருகை தந்தனர். நீர்ப்பாசன சுப்பிறிந்தர் எம்.எம். இப்றாஹீமின் துணையுடன் அடர்ந்த காடுகளுக்குள் மாட்டு வண்டில்களிலும் கால் நடையாகவும் சென்று தமது ஆய்வுகளை இரு வாரங்களாக மேற்கொண்டனர்.

கொண்டவட்டுவான் எனும் இடம்வரையுமே அப்போது ஓரளவு வீதிப்போக்குவரத்து வசதியிருந்தது. அங்கிருந்து இங்கினியாகலை வரையான பாதை அப்போதுதான் அமைக்கப்பட்டுக் கொண்டிருந்தது. சம்மாந்துறையைச் சேர்ந்த ஏ.யூ. முஹம்மத் அலி என்பவர் அதனைக் கொந்தறாத்தெடுத்து அமைத்துக் கொண்டிருந்தார். ஆய்வுக் குழுவினரை கொண்டவட்டுவானுக்கு அப்பாலுள்ள பிரதேசங்களுக்கு அழைத்துச் சென்று இங்கினியாகல மலையுச்சி வரையும் ஏறுவதற்கு இவரே துணையாயிருந்தார்.

தமது ஆய்வின் விளைவாக, கல்லோயா நீர்த்தேக்கம் அமைப்பது தொடர்பான அறிக்கையைக் குழுவினர் சமர்ப்பித்தனர்.

**திட்ட அமுலாக்கம்**

திட்ட அமுலாக்கச் செயற்பாடுகள் 1941 ஆம் ஆண்டிலேயே தொடங்கிவிட்டன. இதன் அங்குரார்ப்பண விழாவைப்பற்றிய விரிவான செய்திகளை 1941 மே 3ஆம் திகதி சனிக்கிழமைய சிலோன் டெயிலி நியூஸ், அதே தினத்தைய மாலைப் பத்திரிகையான சிலோன் ஒப்சேவர் மற்றும் 1941 மே 6ஆம் திகதி செவ்வாய்க்கிழமைய ரைம்ஸ் ஒவ் சிலோன் போன்ற பத்திரிகைகள் வெளியிட்டன.

சிலோன் டெயிலி நியூஸ் பின்வருமாறு கூறியது: "கடந்த செவ்வாய்க்கிழமையன்று கல்லோயா நீர்த்தேக்கம் அமையவுள்ள இடத்தில் மரமொன்றைக் கோடரியால் தறித்து வீழ்த்தியதன் மூலம் விவசாய, காணி அமைச்சர் டி.எஸ். சேனநாயக்க இத்திட்டத்தினை ஆரம்பித்து வைத்தார்.... அவர் அங்கு பேசுகையில் "முதல் மரத்தை இன்று வெட்டியதன் மூலம் கல்லோயா நீர்த்தேக்கம் எனும் குழந்தை இன்று கருக்கொள்கிறது. கருச்சிதைவு ஏற்படாமல் பார்த்துக் கொள்ளவேண்டியது முதலியார் காரியப்பரின் பணியாகும். கரையோரப் பகுதியில் மிக அடர்த்தியாக வாழும் அவரது மக்களை கல்லோயாப் பிரதேசத்திற் குடியேற்றுமாறு அவரை வேண்டுகிறேன். கரையோரப்பகுதி நிலத்தைவிட இப்பகுதி மண் வளம் கூடியதாயிருப்பதைக் காண்கிறேன்."

டி.எஸ். சேனநாயக்க இவ்வளவு தூரம் சிலாகித்துப் பேசிய எம்.எஸ் காரியப்பர் என்பவர் அப்போது கரைவாகுப்பற்று வன்னியாராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தார். இப் பிரதேசத்தின் விவசாய முன்னேற்றத்தில் மிகவும் அக்கறை காட்டியதோடு, கல்லோயாத் திட்டத்தைப் பற்றியும் கூறவேண்டியவிடமெல்லாம் வற்புறுத்தி வந்தார்.

அது மாத்திரமல்லாது தேசிய மட்டத்திலான பொருளாதார அபிவிருத்தியைப் பற்றிய பல ஆலோசனைகளையும் அப்போதே கூறியுள்ளார். 1940ஆம் ஆண்டில் மட்டக்களப்புத் தெற்கு விவசாயிகள் சங்கத்தில் அவர் ஆற்றிய உரையொன்று, அவ்வருடமே 46 பக்க நூலாக வெளியிடப்பட்டுள்ளது. பல தசாப்தங்களுக்குப் பின்னர்தான் இந் நாட்டுப் பொருளியலாளராலும் திட்ட நிபுணர்களாலும் சிந்திக்கப்பட்ட பல விடயங்களை இச்சொற்பொழிவில் அவர் முன்னோடியாகக் கூறியுள்ளார். கல்லோயாத் திட்டம், நெல்லுக்கான உத்தரவாத விலை, மந்தை வளர்ப்பை ஊக்குவித்தல், பால் உற்பத்தியிற் தன்னிறைவு, கூட்டுறவு இயக்கம், விவசாய வங்கி நிறுவுதல், விவசாயிகளுக்கான கடன் மற்றும் மானிய வசதிகள், சிறு பயிர்ச்செய்கை, மீன் பிடித் துறைமுகங்கள் அமைத்தல், நெசவுத்தொழில் விருத்தி எனும் விடயங்களைப் பற்றிக் கூறி, அவற்றுக்கான செயல் முறைகளையும் முன்வைத்துள்ளார்.

இவ்வாறு 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்தே பட்டிப்பளை ஆற்று நீரை எவ்வாறு சேமித்துப் பிரயோசனப்படுத்தலாம் எனும் சிந்தனை உருவாகி; 1941இல் கல்லோயா நீர்த்தேக்க அமைப்பிற் தொடங்கி; பின்னர்

இலங்கையின் முதலாவது பாரிய பல்நோக்குத் திட்டமாக விரிவடைந்து, 1950களிலிருந்து கிழக்குப் பிரதேச மக்களுக்கும், நாட்டுக்கும் பயனளித்துக் கொண்டிருக்கிறது.

1949 ஆகஸ்ட் 28ஆம் திகதி இங்கினியாகலையில் நடைபெற்ற விழாவுக்கு மாளிகைக்காடு தம்பிராசாக் காக்காவின் டிறக் வண்டியில் எனது தந்தையார் என்னையும் அழைத்துச் சென்றார். அம்பாறைப் பகுதியில் பஸ் சேவை ஆரம்பிக்கப்படாத காலம். மல்வத்தை எனும் இடம் வரை மட்டுமே காலையில் ஒரு முறையும் மாலையில் ஒரு முறையும் கல்முனையிலிருந்து பஸ் போய்வரும். கிடுகினால் வேயப்பட்ட தற்காலிக கட்டிடங்கள் அம்பாறையிலும் இங்கினியாகலையிலும் காணப்பட்டன. ஏனைய கட்டிடங்கள் அமைக்கப்பட்டுக் கொண்டிருந்தன. இத்திட்டத்தின் கொந்தராத்துக்காரர்களான அமெரிக்காவைச் சேர்ந்த மொறிசன் நட்சன் இன்டர்நேஷனல் கார்ப்பரேஷனின் பாரிய இயந்திரங்கள் பயங்கர சத்தத்துடன் ஆங்காங்கு ஓடித் திரிந்தன.

கல்லோயா அபிவிருத்தித் திட்டத்தின் முன்னேற்றத்தைப் பார்வையிடப் பிரதமர் டி.எஸ். சேனநாயக்க 1951இல் மீண்டுமொருமுறை இங்கு வருகை தந்தார். 1951 ஜூன் 11ஆம் திகதி அவரது கைப்பட எழுதப்பட்ட குறிப்பொன்று பின்வருமாறு கூறுகின்றது:

"கல்லோயாப் பிரதேசத்துக்கு 1951 ஜூன் 10ஆம் திகதி விஜயம் செய்து திட்டத்திலேற்பட்டுள்ள முன்னேற்றத்தை நேரடியாகவே அவதானித்தேன். குறிப்பிட்ட காலத்துக்கு முன்பாகவே திட்டம் பூரணமடையக்கூடிய வேகத்தில் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதன் ஆரம்ப தினத்திலிருந்தே கேட்முதலியார் எம்.எஸ். காரியப்பர் காட்டிய அபரிமித அக்கறையை இச்சந்தர்ப்பத்தில் மகிழ்வுடன் நினைத்துப் பார்க்கிறேன். இவ்வணைக்கட்டு வேலைகளை அங்குரார்ப்பணம் செய்வதற்காக இவ்விடத்தில் நான் முதலாவது மரத்தை வெட்டி இப்பொழுது சரியாகப் பத்தாண்டுகள் ஆகிவிட்டன. இப்பிரதேசத்தின் பொருளாதார வளர்ச்சியே எமது விசுவாச அபிலாஷையாயிருந்தது. இத்திட்டம் பூரணமாக நிறைவேற வேண்டுமெனும் முயற்சியில் என்றுமே தளராதவர் முதலியார் காரியப்பர். இப்பணிகள் ஒப்படைக்கப்பட்டோர் அபாரமாகப் பணிபுரிவதில் அவர் சந்தோஷப்படுவார். எமது கனவுகள் நிறைவேறியதை அவரும் நானும் கூட்டாக உணர்கிறோம்."

கல்லோயா அபிவிருத்தித் திட்டத்தோடு என்றும் நினைவு கூரப்படவேண்டிய இன்னுமொருவர் பொறியியலாளர் எம்.எம். இஸ்மாயில் ஆவார். ஆரம்பத்தில் பொலன்னறுவை பராக்கிரம சமுத்திரத் திட்டத்தின் நிர்மாணப் பொறியியலாளராக டி.எஸ். சேனநாயக்காவால் நியமிக்கப்பட்டுப் போற்றத்தக்க பணியாற்றினார். அப்பணி நிறைவேறியதும், கல்லோயாத் திட்டத்தின் நீர்ப்பாசனப் பொறியியலாளராக நியமிக்கப்பட்டார்.

இத்திட்டத்தின் கீழான அனைத்து வாய்க்கால்களையும் பொறியியலாளர் இஸ்மாயிலே திட்டமிட்டுச் செய்து முடித்தார். அத்துடன் எக்கல்ஆறு, நாமல் ஓய, பன்னலகம ஆகிய நீர்ப்பாசனக் குளங்கள் அவரது சிபார்சிலேயே கட்டப்பட்டன.

இங்கினியாகலையிலுள்ள அணைக்கட்டின் உயரத்தை மேலும் ஏழரை அடியால் உயர்த்த வேண்டுமென்று எப்போதும் வலியுறுத்தி வந்தார். அதன் மூலம் அந்நீர்த் தேக்கத்தின் பயன்பாட்டை அதிகரிக்க முடியுமென்பது அவரது அசைக்க முடியாத நம்பிக்கையாயிருந்தது.

**பலாபலன்கள்:**

கல்லோயா பல்நோக்கு அபிவிருத்தித் திட்டத்தின் பலாபலன்களாவன:

1. சேனநாயக்க சமுத்திரம்

| | | | |
|---|---|---|---|
| சமுத்திரத்தின் நீர் கொள்ளளவு | - | கனஅடி | 7,70,000 |
| அணைக்கட்டின் நீளம் | - | அடி | 3,600 |
| அணைக்கட்டின் உயரம் | - | " | 272 |
| நீர் மட்டம் | - | " | 110 |
| நீரில் அமிழும் பரப்பு | - | ஏக்கர் | 19,250 |
| இடதுகை பிரதான வாய்க்காலின் நீளம் | - | மைல் | 32 |
| வலதுகை பிரதான வாய்க்காலின் நீளம் | - | " | 22 |
| சமுத்திர நீரைக்கொண்டு செய்யப்படும் | | | |
| நெல்விவசாயம் | - | ஏக்கர் | 1,12,506 |
| கரும்பு | - | " | 11,188 |
| மின்சக்தி உற்பத்தி | - | மெகாவோட் | 11.25 |
| நன்னீர் மீன்வளர்ப்பு | - | | |

2. குடியேற்றத்திட்டம்

3. தொழிற்சாலைகள்

ஹிங்குறான - சீனி, மதுசாரம்

இறக்காமம் - ஓடு

சவளக்கடை - அரிசி ஆலை

அம்பாறை - மரத்தளபாடம்

**அனுபவிப்பது யாரோ!**

கல்லோயா நீர்ப்பாசன வசதிகள் கிடைப்பதற்கு முற்பட்ட காலத்தில், போதிய நீரின்மையால் வேளாண்மைச் செய்கையில் பெரிதும் அவதியுற்ற இப்பிரதேச மக்கள், இந்நீர்ப்பாசன வசதி கிடைத்த பின்னர் பெரும் நன்மையடைந்தனர். தமது நிலங்களில் இரு போக வேளாண்மைச் செய்கை பண்ணக் கிடைத்ததன் மூலம், பொருளாதார வளம் பெருகியது.

ஆனால், இத்திட்டத்தின் பிறிதொரு முக்கிய அம்சமாக மேற்கொள்ளப்பட்ட குடியேற்றத் திட்டத்தினால் இம்மக்கள் தமக்குரிய பயனைப் பெறவில்லை. இப்பிரதேசத்தைச் சேர்ந்த சிறிய அளவினரான குடும்பங்களே இங்கு குடியேற்றப்பட்டனர். ஒவ்வொன்றும் 150 வீடுகளைக் கொண்ட 36 கொலனிகள் ஏற்படுத்தப்பட்டன. அவற்றுள் இலக்கம் 5, 12 என்பன முஸ்லிம்களுக்கும்; 11, 13, 15 என்பன தமிழருக்கும் ; 4, 6 என்பன இரு இனத்தாருக்கும் வழங்கப்பட்டன. ஏனைய 29 கொலனிகளும் மாத்தறை, குருணாகல், கேகாலை போன்ற மாவட்டங்களிலிருந்து கொண்டு வரப்பட்ட சிங்களக் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன.

அப்போதைய கல்முனைத் தேர்தற்றொகுதி துண்டாடப்பட்டு, அம்பாறை எனும் பெயரில் புதியதொரு தொகுதி உருவாக்கப்பட்டது. மாவட்ட நிர்வாகத் தலைமைப் பீடமான அம்பாறை நகரத்தில் இப்பிரதேசவாசிகளின் ஒரு சதவீதமான வர்த்தக நிலையங்களேனும் கிடையாது.

சீனித் தொழிற்சாலையின் கரும்புச் செய்கைக்கென முஸ்லிம்கள் வேளாண்மை செய்து கொண்டிருந்த ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் சுவீகரிக்கப்பட்டன. ஆனால் சில வருடங்களின் பின்னர் இக்காணிகளில் கரும்புச் செய்கை கைவிடப்பட்டது. அவ்வாறான சந்தர்ப்பத்தில்,

இக்காணிகளை எவரிடமிருந்து சுவீகரித்தனரோ, அவர்களிடம் மீளக் கையளிப்பதே நீதியும் நேர்மையும் மனிதாபிமானமுமாகும். எனினும் அவ்வாறு செய்யப்படவில்லை. அவர்கள் எவ்வளவோ வேண்டியுங்கூட, பிற மாவட்டங்களிலிருந்து வந்த புதியவர்களுக்கே அவை உடமையாக்கப்பட்டன.

இன்னுமொரு துன்பியல் அம்சமுமுண்டு. சேனநாயக்க சமுத்திரத்திலிருந்து வெளியேறும் மேலதிக நீர் கடலுக்குச் சென்றடையக் கூடிய முறையான வடிகாலமைப்புமுறை செய்யப்படவில்லை. இதன் காரணமாக இடதுகை வாய்க்காலால் வரும் நீர் கல்முனை, சாய்ந்தமருது, காரைதீவு, சம்மாந்துறைப் பிரதேசத்தின் சுமார் 2500 ஏக்கர் செழிப்பான வயல்களை நிரந்தரமாக நீருள் ஆழ்த்தியுள்ளது. அதேபோன்று வலதுகை வாய்க்கால் நீரினால் அக்கரைப்பற்று மற்றும் அட்டாளைச்சேனைப் பகுதியில் மேலும் 2500 ஏக்கர் பொன்விளை பூமி நீரில் மூழ்கிக் கிடக்கிறது. இன்றுவரை இவற்றுக்கான வடிகால் அமைப்பு எதுவும் இல்லை.

## iv. கிழக்கின் போக்குவரத்து

வழிநடைச் சிந்து தொடர்பாக, இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் கிழக்கு மாகாணப் போக்குவரத்து வசதிகள் எவ்வாறிருந்தன என்பதை அறிவதும் ருசிகரமான தகவலாகும்.

அக்கால அரச அதிபர்களின் வருடாந்த அறிக்கைகள், எஸ். ஓ. கனகரத்தினம் அவர்களால் எழுதப்பட்ட "கிழக்கு மாகாண மட்டக்களப்பு மாவட்ட வரைபு நூல்" (*Monograph of the Batticaloa District*), அன்று வாழ்ந்தோருடனான உரையாடல் என்பவற்றிலிருந்து பல தகவல்களைப் பெறமுடிகின்றது.

ஆங்கிலேயர் ஆட்சியின் ஆரம்பகாலத்தில் கிழக்கு மாகாணத்தின் தலைநகராகத் திருகோணமலை இருந்தது.

1870 மே மாதத்தில் தலைநகர் மட்டக்களப்புக்கு மாற்றப்பட்டு அதன் முதல் அரச அதிபராக 'ஆர். டபிளியூ. ரி.மொரிஸ் என்பவர் பதவி ஏற்றார்.

1960களிலிருந்து மட்டக்களப்புக் கல்வித் திணைக்களம் இருந்த கட்டிடமே அரச அதிபரின் உத்தியோகபூர்வ இல்லமாக இருந்தது.

தலைநகரை மீண்டும் திருகோணமலைக்கே கொண்டு செல்லவேண்டு மெனும் முயற்சிகள் ஓரிரு முறை மேற்கொள்ளப்பட்டனவாயினும் அவை வெற்றி அளிக்கவில்லை.

மட்டக்களப்பிலிருந்து மூன்று பிரதான வீதிகள் சென்றன. ஒன்று பதுளைக்கும், மற்றொன்று வடகரை வீதியெனும் பெயரில் திருகோணமலைக்கும், பிறிதொன்று தென்கரை வீதியென கும்புக்கன் ஆறுவரையும் (மொனராகலையின் எல்லை) சென்றன.

நூற்றி மூன்று மைல் நீளமுடைய வீதி பதுளை வரைக்கும் சென்று, அங்கிருந்து பதினெட்டு மைல்கள் பண்டாரவளை வரை சென்றது.

குதிரை வண்டியே இப்பிரயாணத்திற்குப் பயன்படுத்தப்பட்டது. கொழும்பு செல்வோர் பண்டாரவளை வரை இவ்வாறு சென்று அங்கிருந்து புகையிரதத்தில் பயணத்தை மேற்கொண்டனர்.

கல்குடாவிலிருந்து நீராவிக்கப்பல் மூலம் கொழும்புக்குச் செல்லும் பிரயாண முறையும் வழக்கிலிருந்தது.

திருகோணமலை வீதி 84 மைல் தூரமுடையது. இடையில் ஏழு துறைகளைத் தோணி, வள்ளம், பாதை என்பன மூலம் கடந்து செல்ல வேண்டியிருந்ததனால் இதிற் பிரயாணம் செய்வது கஷ்டமாயிருந்தது.

கும்புக்கன் ஆறு வரையுமான தென்கரை வீதி நூற்றிரண்டு மைல் நீளமுடையது. மட்டக்களப்பிலிருந்து கோரைக்களப்பு வரையுமான 49 மைல்கள் கல்வீதியாயும், அங்கிருந்து நாவலாறு எனும் இடம் வரையிலான 23 மைல்கள் கிரவல் வீதியாயும், எஞ்சிய 30 மைல்கள் காட்டு வண்டிற் பாதையாயுமிருந்தன.

'கல்றோட்டு' எனும் பொழுது தற்போதுள்ளது போன்று தார்வீதிகளல்ல அவை. பாரிய கருங்கற்களைப் பரவி அதன் மேல் சிறு கற்களைப் போட்டு அதற்கு மேல் களி கலந்த மணலைப் போட்டு அழுத்தியிருப்பர்.

இன்னொரு வகை, அம்மிக்கல் போன்ற அமைப்பில் பாரிய துண்டுகளாகக் கருங்கல் வெட்டப்பட்டுப் பரவி அடுக்கப்பட்டிருக்கும்.

இத்தகைய வீதியொன்று காரைதீவுச் சந்தியிலிருந்து மாவடிப்பள்ளி வரை மிகச் சமீப காலம் வரை இருந்தது.

இவ்வீதிகளைப் போடவும் பராமரிக்கவும் "பைனர்" எனப்படும் இந்தியத் தொழிலாளர் வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்தனர்.

அத்துடன் வீதியோரங்களில் ஆல், அரசு, வாகை, மருதம் போன்ற நிழல்தரு மரங்களை நடவும், அடைப்புக் கட்டிப் பாதுகாக்கவும், நீரூற்றவும், பராமரிக்கவும் தொழிலாளர் அரசினால் நியமிக்கப்பட்டிருந்தனர்.

கால் நடையாகவும், வண்டியிலும் பிரயாணம் செய்வோருக்கு இவை இதமான நிழலை வழி நெடுகிலும் வழங்கின.

கடந்த இரண்டு மூன்று தசாப்தங்களுள் தந்திக் கம்பிகளை இணைப்பதற்காக வீதியின் ஒரு புறமிருந்த மரங்கள் வெட்டப்பட்டன. மின்சாரக் கம்பிகளை இணைப்பதற்காக மறுபுறத்திலிருந்த மரங்களும் வெட்டப்பட்டு விட்டன.

இந்நாட்டின் இயற்கைச் சூழலுக்குச் செய்யப்பட்ட பாரிய அநியாயங்களில் இதுவுமொன்றாகும்.

மட்டக்களப்புக்கும் கும்புக்கன் ஆற்றுக்குமிடையே கிளை வீதிகள் மிக அரிதாகவே இருந்தன. கல்முனையிலிருந்து கடற்கரையிலிருந்த வாடி வீட்டுக்கு ஒரு கிளை வீதியும், இரு மைல் தொலைவிலுள்ள கிட்டங்கித்துறை என்னுமிடத்திற்கு ஒரு கிளை வீதியும் இருந்தன.

அவற்றைத் தாண்டிச் சென்றதும் காரைதீவுச் சந்தியிலிருந்து சம்மாந்துறையூடாக இறக்காமத்திற்கு ஒரு வீதி சென்றது.

சம்மாந்துறையில் அதன் ஒரு கிளை பிரிந்து அம்பாறைக்குச் சென்றது. காரைதீவுக்கப்பால் அரசடி என்னுமிடத்தில் (தற்போதய அல்லிமூலைச்சந்தி) இருந்து மல்கம்பிட்டிவரை ஒரு வீதி சென்று சம்மாந்துறையூடான இறக்காமத்துப் பாதையுடன் இணைந்தது.

அக்கரைப்பற்றிலிருந்து சாகாமம் வீதியும், இறக்காமம் வண்டிப் பாதையும் பிரிந்து சென்றன.

*"இரவுச் சாப்பாட்டின் பின் இரட்டை மாட்டுக் கூட்டு வண்டியில் சாய்ந்தமருதூரில் இருந்து புறப்படுவோம். வண்டியில் வைக்கோல் பரப்பி மெத்தை போன்றிருக்கும்.*

*அதன் மேல் பாய் விரித்திருக்கும். புறப்பட்டுச் சிறிது நேரத்தில் வண்டிக்காரன் உட்பட அனைவரும் நித்திரையாகி விடுவோம். மாடுகள் தம்பாட்டுக்கு நடந்து கொண்டிருக்கும்.*

*வண்டியின் கீழ் தொங்கும் ஹரிக்கேன் லாம்பு மிக மங்கலான வெளிச்சத்தைப் பரப்பும். பட்டிருப்புத் தோட்டத்தடியில் மாடுகளைச் சிறிது நேரம் இளைப்பாறச் செய்துவிட்டு, மீண்டும் பயணத்தைத் தொடர்ந்து விடியற்காலையில் கல்லடித்துறையை அடைவோம்.*

*அப்போது கல்லடிப்பாலம் கிடையாது. அது 1930 ஆம் ஆண்டே கட்டப்பட்டது. காலைக் கடன்களை முடித்து அவ்விடத்திலேயே சாப்பிட்டுவிட்டுத் தோணி மூலம் வாவியைக் கடந்து புளியந்தீவுக் கோட்டையடியில் இறங்குவோம்.*

*ஒல்லாந்தரினால் கட்டப்பட்ட இக்கோட்டையிலேயே கச்சேரியும் ஏனைய அரச அலுவலகங்களும் அமைந்திருந்தன. கச்சேரி அலுவல்களை முடித்துக்கொண்டு பிற்பகலில் தோணி மூலம் இப்பால் வருவோம்.*

*வண்டிக்காரன் அங்கேயே மீன் வாங்கி பயணத்தின்போது கொண்டுபோன சமையற் பொருட்களைக் கொண்டு சோறு, கறி ஆக்கி வைத்திருப்பார்.*

*சாப்பிட்டுவிட்டு மீள் பயணத்தை ஆரம்பித்து அடுத்த நாள் அதிகாலை ஊர் அடைவோம்"* எனத் தாம் அக்காலத்தில் மேற்கொண்ட ஒரு பயணத்தைப்பற்றிப் பெரியவர் ஒருவர் குறிப்பிட்டார்.[1]

*இதே காலகட்டத்தில் கல்முனைக்கும் மட்டக்களப்புக்குமிடையேயான பிரதான போக்குவரத்துப் பாதையாக மட்டக்களப்பு வாவி விளங்கியது.*

---

1. இந்நூலாசிரியர் சிறுவனாக இருந்தபோது தினசரி இஷாத் தொழுகை, அதனைத் தொடர்ந்த இராப்போசனத்தின்பின் தந்தையார் மீராலெப்பை சாகுல்ஹமீத் அவர்களோடு ஊஞ்சலாடுவது வழக்கம். ஊஞ்சலின் ஒரு தொங்கலில் தந்தையாரும் மறுதொங்கலில் நூலாசிரியரும் அமர்ந்து ஊஞ்சலாடும் பொழுது தனது இளமைக்காலத்து அனுபவங்களைத் தந்தையார் கூறுவார். அவற்றை அடிப்படையாக வைத்து, ஏனைய தகவல்களையும் சேகரித்துப் பிற்காலத்தில் பல கட்டுரைகள் எழுதப்பட்டன. அவ்வாறானவற்றுள் ஒன்றே இப்பகுதியாகும்.

இப்பாதை ஒரு காலத்தில் சம்மாந்துறை வரை நீண்டிருந்தது. 15ஆம் நூற்றாண்டில் ஆறாம் பராக்கிரமபாகு மன்னனின் ஆட்சிக்காலத்தில் சுமாத்திராவிலுள்ள பாலம்பாங் எனும் இடத்திலிருந்து இலங்கை வந்து வாழ்ந்த ஆனந்ததேரரின் கூற்றுப்படி, காசியப்ப மன்னன் நாட்டின் வடக்கு, மேற்கு, கிழக்கில் மூன்று துறைமுகங்களை அமைத்தான் எனவும், அவை வல்லிபுரம், களனி, சம்மாந்துறை எனவும் அறியக் கிடைக்கிறது.

எனவே சம்மாந்துறை நீண்ட காலத்திற்கு முன்னர் துறைமுகமாக இருந்திருக்கிறது.

சம்பன் என்னும் வகை வள்ளம் வந்தடையும் துறை எனப்பொருள்படும் இவ்வூர்ப் பெயரும் அதை நிலைநிறுத்தும்.

எனினும் இந்நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் கிட்டங்கியிலிருந்து சம்மாந்துறை வரையிலான வாவி, மண் அரிப்பினாலும் நாணற் புதர்களினாலும் மூடப்பட்டதினால் காலக்கிரமத்தில் உபயோகிக்க முடியாமற் போய்விட்டது.

கிட்டங்கித்துறை எனும் பெயர் ஒல்லாந்தர் காலத்தில் ஏற்பட்டது. அவ்வாட்சிக்காலத்தில் நெல், கொப்பரா முதலிய பொருட்களைச் சேமித்து வைத்தற்கான கட்டிடமொன்றை பர்ணாம் எனும் ஒல்லாந்தர் இவ்விடத்தில் நிறுவினார்.

அக்கட்டிடம் கிட்டங்கி எனப்பட்டது. அதையொட்டியே இவ்விடமும் கிட்டங்கித்துறை எனப் பெயர் பெற்றது.

மிகச் சமீபகாலம்வரை கல்முனையின் மேற்கேயமைந்துள்ள கிராமங்களுக்கும் கல்ஓயா குடியேற்றத் திட்டத்தின் சில கொலனிகட்கும் வாவியைக் கடந்து செல்ல இவ்விடத்தில் வள்ளங்களும் தோணிகளும் பயன்பட்டன.

1975ஆம் ஆண்டளவிலேயே கிட்டங்கி - சவளக்கடை வீதியும், தாம்போதியும் வாவிக்குக் குறுக்கே அமைக்கப்பட்டது.

வாவிப் போக்குவரத்தில் பாரிய அபிவிருத்தி ஒன்று 1891 இல் ஏற்பட்டது. அவ்வாண்டிலேதான் ஓ. எஸ். டி. ஓகிரேடி என்பார் "ஷாம்றொக்" (Shamrock) எனும் நீராவிப்படகுச் சேவையை ஆரம்பித்தார்.

ஒகிரெடி எனும் இவர் காரைதீவு, ஒலுவில் ஆகிய இடங்களிலே பாரிய தென்னந்தோட்டங்களை ஆரம்பித்து நடத்தியவர் ஆவார். இவரை கரடித்துரை எனவும் இவரது மனைவியைக் கரடியம்மா எனவும் இப்பிரதேச மக்கள் அழைத்தனர்.

இவரால் ஆரம்பிக்கப்பட்ட இப்படகுச் சேவை அக்காலத்தில் புரட்சிகரமாகக் கருதப்பட்டது. மணிக்கு 7 மைல் வேகத்தில் பயணம் செய்து மூன்றரை மணித்தியாலத்தில் இப்பயணத்தை முடித்தது. தினசரி காலையில் கிட்டங்கியிலிருந்து புறப்பட்டு மட்டக்களப்பை அடைந்து, மாலையில் கிட்டங்கி மீளும். காலக்கிரமத்தில் ஸ்டான்லி கிரீன் என்பார் 1907 இல் அலிஸ், பிரைல் ஆகிய இரு படகுகளை இப்பாதையில் சேவைக்கு விட்டார்.

மட்டக்களப்பின் தென் பகுதியிலிருந்து கண்டிப் பிரதேசத்துடனான போக்குவரத்து 'தவளம்' மூலம் மேற்கொள்ளப்பட்டது. தவளம் என்பது காளைமாடுகளின் துணையுடன் செய்யப்படும் பிரயாணமாகும். பொருட்களைச் சாக்குகளில் கட்டி மாட்டின் முதுகின் இருபுறமும் தொங்கவிடுவர்.

ஒரு தவளத்தில் இருபதில் இருந்து நாற்பது வரையான மாடுகள் இருக்கும். அம்மாடுகள் காட்டினூடான ஒற்றையடிப் பாதையால் ஒன்றன் பின் ஒன்றாய்ச் செல்லும். அவற்றின் கழுத்திலே கட்டப்படும் சகடை எனும் மணி பெரும் ஓசையை எழுப்புவதனால் வனவிலங்குகள் வெருண்டோடிவிடும்.

ஒக்கஸ்பிட்டி, வெல்லஸ்ஸ, பிபில போன்ற பிரதேசத்தினூடாகவே இக் கண்டிப் பயணம் நிகழ்ந்தது. கரையோரப் பிரதேசத்திலிருந்து உப்பு, கருவாடு, வெற்றிலை, சுண்ணாம்பு, புகையிலை முதலிய பொருட்களைக் கொண்டு செல்வர். மீண்டு வரும்பொழுது குரக்கன், இறுங்கு, மிளகு, பாக்கு, பழவகைகள், சோளம், திணை, மண்டு, வற்றாளைக்கிழங்கு என்பவற்றுடன் வருவர். வர்த்தகம் அனைத்தும் பண்டமாற்று முறையில் நடந்தது.

இத்தகைய மெதுவான போக்குவரத்து முறைகள் இந்நூற்றாண்டின் முதல் மூன்று தசாப்தங்களில் மெல்ல மெல்ல மாற்றமடைந்தன.

*1910ஆம் ஆண்டளவில் பைசிக்கிள் இப்பிரதேசத்தில் அறிமுகமாகியது. 1912இல் பஸ் ஓட ஆரம்பித்தது. கம்மல்துரை, சொளுக்கார், அலியார், தாஸ்பிரதர்ஸ், சைமன் முதலாளி, புஹாரி ஆகியோர் பஸ்சேவைகளை நடாத்தினர். திருகோணமலை புகையிரதப்பாதை 1927 மே 2ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு, 1928 இல் புகையிரதம் மட்டக்களப்பை வந்தடைந்தது. கல்லடிப்பாலம் 1930 இல் கட்டி முடிக்கப்பட்டது.*

*கிழக்கு மாகாணத்தின் போக்குவரத்து வசதிகளை அதிகரிப்பதில் அப்போதைய சட்ட நீருபணசபை அங்கத்தினராயிருந்த ஈ. ஆர். தம்பிமுத்துவின் பங்கு மிகமுக்கியமானது.*

*இலங்கையின் ஏனைய பகுதிகளுடன் புகையிரத சேவையினால் மட்டக்களப்பை இணைத்தல் வேண்டும்; மட்டக்களப்பு வாவிக்குக் குறுக்கே கல்லடியில் பாலம் அமைத்தல் வேண்டும் எனச் சட்ட நிருபண சபையில் அவர் மிக வலியுறுத்தினார்.*

*இக்கால கட்டத்தில், புகையிரத சேவையை நிந்தவூர் வரை நீடிக்கவேண்டுமெனும் பிரேரணை சட்ட நிருபண சபையில் நிறைவேற்றப்பட்டு, அடையாள நிதியும் ஒதுக்கப்பட்டது. இதற்கான வரைபடமும் தயாரிக்கப்பட்டது. மட்டக்களப்பிலிருந்து கடற்கரையோரமாக நிந்தவூர் வரையுமான பாதை அமைப்பதற்கான திட்டம் தீட்டப்பட்டுப் பாலங்கள், புகையிரத நிலையங்கள் அமைக்கப்பட வேண்டிய இடங்களும் வரைபடத்தில் அடையாளமிடப்பட்டன. உதாரணமாக, இன்றும் கல்முனைக் கடற்கரையருகே அமைந்துள்ள பொதுமராமத்து இலாகா அலுவலகம் முதலியன உள்ளடங்கிய பிரதேசம் 'புகையிரத திணைக்களத்துக்கான நிலம்' என்றே ஆவணங்களிற் பதிவாகியுள்ளது. எனினும் மட்டக்களப்பிற்குத் தெற்கே புகையிரத சேவையை நீட்டும் பணி இன்றுவரை கனவாக வேயுள்ளது.*

*பொத்துவில் வரையான புகையிரதப்பாதை நீடிப்பு எப்போதாவது நிறைவேறுமா?*

## V. கண்டிப் பயணம்

மன்னார் தாராபுரத்திலிருந்து கண்டி நோக்கிச் செல்லும் புலவர் ஒருவர் வழியிற் தென்படும் ஊர்களை விபரித்துச் செல்லும் பாடலொன்று உண்டு. மன்னார், கட்டைக்காடு, உயிலன்குளம், முருங்கன், கல்லாறு, செட்டிகுளம், முதலிக்குளம், மாங்குளம், மதவாச்சி என வர்ணனை செல்கிறது.

கண்டி நகரடி மானே
எட்டிக் காணலாம் வாவடி தேனே
கண்டி நகரடி மானே
எட்டிக் காணலாம் வாவடி தேனே

நன்றியுடனே எழுந்து நின்று நாயனருளாலே
கண்டித்துறை பார்க்க வண்டினம்போல வலுவாய்ப் பறந்தே
வல்லியறைக் கொசுவப்பா ஊரினில்
கண்டி நகரடி மானே
எட்டிக்காணலாம் வாவடி தேனே.

சுத்துவசா நெறியுள்ள தாராநகரத்தைத் தாண்டி - இன்னும்
தாழ்மையுடனே வேண்டி
குற்றமறுக்கும்
கொசுவப்பா பேரினால் கோதயே நார்சா வேண்டி
இன்னும் பத்தினி மாது நபிகள் பேரினால்
பாத்திஹா ஓதுவோம் நின்று
சக்தியுடனே எழுந்து நிமிர்ந்து
தாரணியோர்க்கு சலாம் சொல்லியே
கர்த்தரை எண்ணிக் கருத்தா நடக்கையில்
கண்டோமடி தாராக்குண்டென்னும் தரவையை .....கண்டி....

பொன்னின் வடிவுள்ள பூவையாளே
இதைப்போக்கி நடக்கலாம் வாடி
இன்னும் பூவுலகத்தார்கள் புகழாய் நடக்கும்
புதுக்கம்பி ரோட்டினைப் பாராய்

கன்னியரே இது கண்டி ரோட்டாம் காலசந்தால் கவிபாடி
இன்னும் காரணமாய் நடக்கையிலே
முன்னும் காணுதடி சனம்கோடி
அன்னமே உன்னி நடந்து ஓடிவாவடி
சின்னக்கடை கோயில்
முன்னே தெரியுது
மன்னாருப்பள்ளி மதிலும் தெரியுது
மங்கையரே இனித் தங்காமல் ஓடிவா..... கண்டி.....

அச்சமில்லாமல் நடந்தோடி வாவடி
கச்சேரி வாசலைப்பாரு
இன்னும் அடுக்கடுக்காகக் கடைகள் நெடுகத்தோணுது
ஆயிழையே மன்னாரில்
நிச்சயமான சரக்குகள் விக்குது
நீ நெடுகச் சுற்றிப்பாரு
இன்னும் பிச்சைத்தம்பி கடை மிச்சம் சரக்குகள்
பெண்ணே அதற்குள்ளே சேரும்
இச்சை மனதுக்கு இந்தச் சரக்குகள்
எண்பது ரூபாவுக்கு வாங்கி முடித்தபின்
பிட்சனம் பேசாமல்
தோகையே ஓடிவா
தோணித்துறைவந்து வீடு கண்டோம்.... கண்டி.....

அஞ்சன வேல்விழி வஞ்சியரே ஆற்றைக்கடப்பதும் தொல்லை
இரும்பாணி அறைந்திடும் தோணியில் ஏறி அக்கரை போவதும் மெல்ல
தஞ்சமதாக நடக்கையிலே முன்னும் தள்ளாடிப்புளியிடை நல்ல
அதைத் தள்ளி நடக்கையிலே கள்ளிகட்டைக்காடு
கண்டோம் இனிச் சொல்ல
உஞ்சிப்பில்லாமலே ஓடி நடந்துவா
உயிலங்குளமும் மயிலே தெரியுது
முன்செல்லும் பாதையை முடுகி நடக்கையில்
முருங்கனும் கண்டோம் நெருங்கி நடந்துவா....கண்டி...

குங்குமம் போன்ற குளிர்ந்த மனமுள்ள
கோதிழையே உனக்கென்ன
அந்த கொம்பஞ்சங்க ஊர் செம்மையாய் தோணுது
கூட நடந்து வா பெண்ணே.

கன்னியரே இது தண்ணீர் இறக்கமாம்
மாவெடுத்து அதில் உண்ண
வெயில் மத்தியானமாயிருக்குது
நாம நித்திரை கொள்ளலாம் பெண்ணே.

தூங்கி முழித்து எழுந்து நடக்கையில்
இன்னா தெரியுது வண்ணான் கல் ஊராம்
காங்கில் உயரு கதிரோன் மறையுமுன்
கல்லாறு தான் நமக்குத் தங்க நல்ல இடம்...கண்டி....

கல்லாறு தங்கி கறிசோறுகளாக்கி
கருத்துடனே நாமள் உண்டு
இன்னும் கங்காணி வீட்டில் போய்ப்படுத்து
களைப்பாறி நித்திரை கொண்டு
நல்லா விடியுமுன் நாமள் எழுந்து
நடக்கின்ற பாதையில் நின்று
நாயகியே நாமள்
வெற்றிலை பாக்கு நலமுடனே போட்டுமென்று
இல்லல்லாஹ்வென்று எழும்பி நடக்கையில்
இன்னா தெரியுது செட்டிக்குளம் - இன்னும்
உல்லாசமான உளுக்குளம் தோணுது
உத்தமியே நீயும் நத்தி நடந்துவா..... கண்டி.....

பாவையரே இது முதலியார் குளமாம்
பார்க்கப் பெரும் குளமாமே
அந்தப் பாதையிலே ஒரு பட்டினம் தோணுது
அது பாரடம்பன் குளமாமே
கோதையரே இது மாங்குளமாம்
கோப்பிகள் விற்கும் ஊராமே
அதில் கொஞ்சம் பசிக்கு வாங்கிக் குடித்து

குறிப்பாய் நடக்கலாம் பெண்ணே
தாகத்தைத் தீர்த்து நடந்தோடி வாவடி
தையலரே இது
எக்காவ ரம்பைக் குளம்
காதலுடனே கருத்தா நடக்கையில்
கண்டோமடி மதவாச்சி என்னும் ஊரு
கண்டி நகரடி மானே எட்டி காணலாம் வாவடி தேனே
கண்டி நகரடி மானே எட்டி காணலாம் வாவடி தேனே.

## vi. பக்கீர்ப் புலவர் காத்தான்குடி போகிறார்

மன்னார் பிரதேசத்தைச் சேர்ந்த சிறப்பான புலவர்களுள் ஒருவர் பக்கீர்ப் புலவர். இவர் ஒருமுறை கிழக்கு மாகாணத்திலுள்ள காத்தான்குடிக்குச் செல்கிறார். அக்காலத்தில் மன்னாரிலிருந்து மட்டக்களப்புக்குச் செல்வது மிக நீண்டதோர் பயணமாகும். இது பல நாட்கள் பிடித்திருக்கும்.

அவ்வாறான நீண்ட பயணத்தை மேற்கொண்டு காத்தான்குடி சென்ற பக்கீர்ப்புலவர் அங்குள்ள சந்தையைக் கண்டு பிரமிப்படைகிறார். ஒரு காலத்தில் மட்டக்களப்புப் பிரதேசத்தின் மிகப் பெரும் சந்தையாக பல கிராம மக்களும் ஒன்றுகூடும் இடமாகக் காத்தான்குடிச் சந்தை விளங்கியது. குறிப்பாக மலைநாட்டுப் பொருட்கள் யாவும் இச்சந்தைக்குக் கொண்டுவரப்பட்டு, இங்கிருந்தே கிழக்கு மாகாணத்தின் ஏனைய கிராமங்கள் அனைத்துக்கும் கொண்டு செல்லப்பட்டன. பெரும்பாலான ஏனைய கிராமங்களிலும் பிரபல வர்த்தகர்களாகக் காத்தான்குடி மக்களே தொழில் செய்தனர். இத்தகைய வளம்மிக்க ஓரிடத்தைக் கண்டவுடன் பக்கீர்ப்புலவரின் கவிதை ஊற்றெடுக்கிறது. அச்சந்தையிலுள்ள கனி வர்க்கங்கள், காய்கறி வகைகள், கிழங்குகள், கீரைகள், பறவைகள், இறைச்சி, மீன், கறிச்சரக்குகள், புடவைகள், பலகாரம், இனிப்புப் பண்டங்கள் என வர்ணிக்கப்படுகின்றன.

பக்கீர்ப் புலவரின் பாடல் இதுதான்:

விந்தை மிகுந்திலங்கும் மேலானதாய் விளங்கும்
விளப்பம் மிகுந்த மட்டக்களப்பு நகரைச் சேர்ந்த
காத்தான்குடி ஐந்தாம் குறிச்சியின் கூறாய்
வளம்மிகுந்த மீராப்பள்ளியைச் சேர்ந்த சந்தையைப் பாராய்.

மாங்கனி தேங்கனி
தேக்குப்புளிமாங்கனி சிவந்த வாழையின் கனி
மொந்தவாழையின் கனி செங்கதலியின் கனி
யானைவாழையின் கனி இதரவாழையின் கனி
இனும் பல கனிகள் இரசமிக்கத் தரும்
கொய்யாக்கனிகள் ஒருபகுதி.....

ஆங்கு தோடையின் கனி
அன்னதாளை என்கனி அன்னமினாக்கனி
தொங்கும் முந்திரிக்கனி கொடிமுந்திரிக்கனி அன்னாசியென் கனி
கூறும் மாதுளங்கனி ஈரப்பலா என்கனி கொடிமிச்சம் கனிகள்
இலாமிச்சை எலுமிச்சங்கனிகள் ஒருபகுதி...

ஓங்கும் முருகங்கனி புட்டுப்பழ மென்கனி புசிக்கும் பலவென்கனி
ருசிக்கும் பலவென்கனி பாங்குவிதை என்கனி நயந்த வத்தகக்கனி
வியந்த பப்புளுக்கனி நலந்தரும் கனிகள் நல்ல சிறுயிலந்தை
என்கனிகள் ஒருபகுதி.....

ஓங்குன பரிண்ணி ஒதுங்கு என்கனி ஒடிக்கும் வாடிக்கனி
தொடிக்கும் துவடிக்கனி வாங்கும் வத்தகக்கனி
வர்க்கம் மிகுந்து விற்கும் ஆதாயமான
சந்தையைப் பாராய்......

கத்தரிக்கா பூசனிக்கா சுரக்கா புடலங்கா கறிப்பீக்கங்கா
சுத்தவரிப் பீக்கங்கா பயத்தங்கா வத்தகக்கா பப்புளுக்கா
வண்டக்கா சுண்டக்கா வாழைக்கா வருக்கக்கா நிகளக்கா
முருங்கக்கா வாய்ந்த பூசணிக்கா நெடுங்சுரக்கா
நீத்துப்பூசணிக்கா ஒருபகுதி....

சுத்தக்கறிக்கிழங்குகள் துவரக்கா அவரக்கா
தோடங்கா வடுமாங்கா நீடிக்கு விளிமாங்கா
கொட்டிக்கிழங்கு பச்சை மிட்டிக்கா மொச்சிக்கா
குமிட்டிக்கா மட்டுமே குப்பறையாய் கொண்டு குவிச்சிருக்கு
விலைகள் சொல்லிச் சலிச்சிருப் பார்கள் ஒருபகுதி....

வத்தாளைக் கிழங்கோடு சுத்தப் பிறைக்கிழங்கும்
வட்டிக்கிழங்கினோடு கொட்டிக்கிழங்கும்கூட
மத்தப்பக்கம் மரவள்ளி சுரவள்ளி
மகிழும் சக்கரவள்ளி புகழும் சக்கரவள்ளி
எனப் பலகிழங்கும்
நிறுத்து விற்கும் துறைபல விளங்கும் ஒருபகுதி....

முன்னால் பலகீரை முருங்கை பொன்னாங்காணி
முஸ்ட பூசணிக்கீரை பசுந்தான சிறுகீரை
இத்தனை இலைக்கறி எனச் சொல்லமுடியாது
ஏராளம் இன்னுமந்த மீராப்பள்ளி சந்தையைப் பாராய்

காட்டுக் கோழியும் உடன் நாட்டுச் சேவலும் தாறா
கினிக்கோழி வான்கோழி மணக்காடை கௌதாரி
ஆட்டுத்திரளும் பதம் மாட்டுத்திரளும்கூட
விலைகள் சொல்லிக் களைப்புற்று நிற்பார் ஒருபகுதி....

மாட்டுக்கறி ஒருபக்கம் ஆட்டுக்கறி
மான்கறி மரைக்கறி வான்கோழி முயல்கறி
காட்டுச்சேவலின்கறி வீட்டுச்சேவலின் கறி
கோழிக்கறியும் கவுதாரிக்கறியும்
நிறுத்துவிக்கும் கசாப்பும் ஒருபகுதி.....

சேத்துமீன் கருங்கண்ணி சிறையாமீன்
கடல்விரால் திரளி மணலை ஊழி திருக்கை உளுவை காரை
வேற்றும் கொடுவா நெய்மீன் வேளா கொய்யும்
வெண்ணச்சுறாவும் தந்த மெண்ணப்படை மீன்கள் விற்றிடுவார்
கணக்குப்படி வாங்கி விற்றிடுவார் ஒருபகுதி...

மீட்டும் கறிச்சரக்கு மிளகு சீரகம் மல்லி வெந்தயம்
மஞ்சள் தட்டில்
கூட்டும் தயிர்வகை குடம்தோறும் சுமைகொண்டு
கூறித்திரியும் அந்த மீராப்பள்ளிச் சந்தையைப்
பாராய்-பெரியபள்ளி...

பட்டுநூல் சாரம் பளையகாட்டுச் சாரம்
பச்சவடம் சுங்கோடி மெச்சும் சந்தனப்பட்டு
மூட்டும் முக்கடுக்கு முழுப்பட்டு வெண்பட்டு
மோகனக் கண்டாங்கி பூப்பட்டு சரசரக்கும் சாரம்
அடுக்கி வைத்து நெடுக விற்பார் ஒருபகுதி....

சின்னச் சிட்டப் பொத்தின லேஞ்சி
சென்னப் பட்டண லேஞ்சி சிவிலேஞ்சி
பெரிய மதுர லேஞ்சி சம்பக்குளச்சி லேஞ்சி
சஞ்சின்ன சருலேஞ்சி பஞ்சன லேஞ்சி
தலைக்கட்டு விற்பார்
கிழவர் அங்கு விலைகேட்டு நிற்பார் ஒருபகுதி...

முட்டப்பம் வடை அல்வா லட்டு மிட்டாய்கள்
பூப்பொந்து சர்பத்து தேன்குழல் ஒரு தட்டில்
கட்டு மீறும் கற்கண்டு சர்க்கரை
கருப்பட்டி பனைவெல்லம் கரும்புக்கட்டுகள் உள்ள
கடைகள் வைத்திடுவார்
கணக்குப்படி வாங்கி விற்றிடுவார் ஒருபகுதி....

பொட்டி கமழும் அத்தர் புனுகு நஜ்மா அத்தர்
பூவத்தர் மணக்கும்
அரியவன் அருள் கொண்ட பெரிய பள்ளியைச் சேர்ந்த
சந்தையைப் பாராய்..... பெரியபள்ளி சந்தையைப் பாராய்.